**அனுப்புநர்**

திருமதி. க. தாயம்மாள், பி. எஸ்ஸி,
உதவி இயக்குநர்,
அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம்,
வேலூர் – 7

**பெறுநர்**

மாவட்டக் கல்வி அலுவலர்,
மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம்,
திருப்பத்தூர், வேலூர், அரக்கோணம்,
இராணிப்பேட்டை மற்றும் வாணியம்பாடி.

**ந. க. எண்: 000407 / அ3 / 2021** **நாள்: .04.2021**

**அய்யா/ அம்மையீர்,**

**பொருள்:** வேலூர் – 7, அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம், தேர்வுகள் தொடர்பான தகவல்களை பள்ளிகளிடமிருந்து பெறவும், உரிய பள்ளிகளுக்கு கடிதங்கள் அனுப்ப வேண்டி உள்ளதால் தற்போது நடைமுறையில் உள்ள பள்ளி எண் / பள்ளி பெயர் / பள்ளியின் முழு முகவரி / பள்ளி தலைமையாசிரியர் தொலைபேசி எண் / மின்னஞ்சல் முகவரி கல்வி மாவட்ட வாரியாக பட்டியலிட்டு அனுப்பி வைக்கக் கோருதல் – தொடர்பாக

-----

இத்துறையால் நடத்தப்படும் 10, 11 மற்றும் 12 –ஆம் வகுப்பு பொதுத் தேர்வு தொடர்பாக முக்கிய தகவல்களை பள்ளிகளிடமிருந்து பெறவும் மற்றும் இத்துறையால் உரிய பள்ளிகளுக்கு கடிதங்களை அனுப்ப வேண்டி உள்ளதால் அஞ்சல் எண் உடன் பள்ளியின் முழு முகவரியும் தேவைப்படுகிறது.

மேலும், 10 மற்றும் 12–ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிப்பெற்ற மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத் தன்மை தொடர்பான கடிதப் போக்குவரத்து நடைபெறவும் பள்ளியின் முழு முகவரி தேவைப்படுகிறது. எனவே மாநில அரசுத் தேர்வுகளில் பங்குபெறும் அனைத்து பள்ளிகளின் முழு முகவரியை பள்ளி வாரியாகவும் மற்றும் கல்வி மாவட்ட வாரியாகவும் தெலைபேசி எண் மற்றும் தலைமையாசிரியரின் கைபேசி எண்ணுடன் பட்டியலிடப்பட்டு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஒவ்வொரு வட்டாரக் கல்வி அலுவலர் அலுவலகத்தின் ஆளுகைக்கு உட்பட்டு இயங்கும் தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் தற்போது உள்ள முகவரியை கீழ்கண்ட இணைப்பு பட்டியல்படி மாவட்டக் கல்வி அலுவலகம் / வட்டாரக் கல்வி அலுவலகம் வாரியாக Excel-ல் தனித் தனியாக பட்டியலிட்டு பதிவு செய்து உடன் இவ்வலுவலக மின்னஞ்சல் முகவரியான addge.velre@gmail.com -க்கு அனுப்பி வைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஒம்/–
உதவி இயக்குநர்